பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 28 ஞாயிற்றுக்கிழமை 14.01.2024 கதிர் 428

# இன அழிப்புக்கான நீதியை வெல்வதில்தான் தன்மானமும், பாதுகாப்பும் உறுதிசெய்யப்படும்

## அந்த வரலாற்றுப் பணிக்கு தமிழ்நாடு முழுப் பங்காற்றவேண்டும்

## அயலகத் தமிழர் விழாவில் கனடா எம்.பி. லோகன் கணபதி உரை

**இனவழிப்புக்கு உள்ளான தமிழினம் நீதியை வென்றெடுப்பதில்தான் உலகத் தமிழர்களின்தன்மானமும்பாதுகாப்பும் உறுதிசெய்யப்படும். அந்த வரலாற்றுப் பணிக்கு தமிழ்நாடு முதன்மையான பங்களிப்பை வழங்க வேண்டும் அதற்கு உறுதுணையாக உலகத்தமிழர்களும்அணிவகுத்துநிற்க வேண்டும்.**

**இவ்வாறு தெரிவித்தார் கனடா நாட்டு நாடாளுமன்ற உறுப்பினரான ஈழத்தைப்** ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஓரிருநாள்களின்முன்னர்ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினரானசமிந்த விஜேசிறி தனது பதவியிலிருந்து திடீரென விலகினார். இளம் உறுப்பினரான இவரது பதவி விலகல் அரசியல் வட்டாரங்களில் சலசலப்பை ஏற்படுத்தியது. இந்த மாதத் தொடக்கத்தில்தான் எதிர்த் தரப்பான பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரைத் தங்கள் பக்கம் இழுத்துக் கொண்டிருந்தது ஐக்கிய மக்கள் சக்தி. அப்படியிருக்கும்போது அதன் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் திடீரென பதவி விலகியதும், ஏன்அப்படிநடந்ததுஎன்றகேள்வியை எழுப்பியது.

செவ்வாய்கிழமை காலை நாடாளுமன்றத்திற்கு வந்த ☞ 2

## அனைத்து மக்களுக்காகவும் ரணில் போட்டியிட வேண்டும்

### காலியில் நடைபெற்ற முதல் பரப்புரைக் கூட்டத்தில் தீர்மானம்

ஐக்கிய தேசியக் கட்சியின் முதல் பரப்புரைக் கூட்டம் காலியில் நேற்றுத் தொடங்கியது. இந்தக் கூட்டத்தில் நாட்டின் எதிர்காலத்திற்காகவும் அனைத்து மக்களுக்காகவும் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஜனாதிபதி தேர்தலில்போட்டியிடவேண்டும்என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இங்கு கருத்து வெளியிட்ட ☞ 10

## மின் கட்டணக் குறைப்பு நியாயமாக இடம்பெறுவதை உறுதிசெய்யுங்கள்

### ஜனக்க ரத்நாயக்க வலியுறுத்து

மின்சாரக் கட்டணக் குறைப்பு நியாயமாக இடம்பெறுவதை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்கு-முழு உறுதிப்படுத்த வேண்டும் என்று அதன் முன்னாள் தலைவர் ஜனக்க ரத்நாயக்க வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர்களைச்சந்தித்தபோது அவர்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மின்சார சபையானதுநூற்றுக்கு3 சதவீதம் கட்டணத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் முன்மொழியப்பட்ட தொகையாக நூற்றுக்கு 3.3 சதவீதமே காணப்படுகின்றது. ஆனால், மின்சார சபையானது, இந்த வருடம் 710 பில்லியன்களைவிடவும்அதிகமாக இலாபத்தை ஈட்டவுள்ளதாக அச்சபையே வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கை மின்சார சபையானது கடந்த மூன்று மாதங்களில் 60 பில்லியனுக்கும் அதிக மான இலாபத்தை ஈட்டியுள்ளது. ஆனால்



இந்தத் தொகை சம்பந்தமாக கட்டணக் குறைப்பில் கருத்தில் கொள்ளப்படவில்லை.

இதனைவிடவும்130 பில்லியன்கள் பொது மக்களுக்கு தெரியாது இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி மாறுபட்ட கட்டணக்குறைப்புக்கள் காணப்படுகின்றன.

விசேடமாக ஹோட்டல் துறையினருக்கு 75 சதம்தான் குறைக்கப்பட்டுள்ளது. இது போன்று ஒவ்வொரு துறையினருக்கும் ☞ 2

## யுக்திய சுற்றிவளைப்புக்கள் இன்று முதல் மீண்டும் தீவிரம்

### பதில் பொலிஸ் மா அதிபர் சகல அதிகாரிகளுக்கும் அறிவுறுத்து

யுக்திய சுற்றிவளைப்பில் இன்று முதல் தீவிரமாகஇணையுமாறு பதில்பொலிஸ்மாஅதிபர் தேசபந்து தென்னகோனினால் பிராந்திய பொறுப்பதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்தஅறிவுறுத்தல் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அனைத்து பிராந்தியங்களுக்கும் பொறுப்பான அதிகாரிகள், மாவட்டங்களுக்குபொறுப்பான அதிகாரிகள், ☞ 8

## போதைப்பொருள் சந்தேகநபர்களும்கூட மனிதாபிமானமாக நடத்தப்படவேண்டும்

### சட்டத்தரணிகள் வலியுறுத்து

போதைப் பொருள் பயன்படுத்துவோர் மற்றும் விற்பனை செய்வோர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்படுபவர்களும் மனிதாபிமானமாக நடத்தப்படுவதற்குத் தகுதியானவர்களே என்று கைது செய்யப்பட்டவர்களுக்காகச்செயல்படும்வழக்கறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆளும் தரப்பின் யுக்திய நடவடிக்கையின்போது அங்கீகரிக்கப்படாததேடுதல்கள், தன்னிச்சையான ☞ 8

## சட்டத்திற்குள் நின்று செயற்படுமாறு பொலிஸ் ஆணைக்குழு கோரிக்கை

யுக்திய சுற்றிவளைப்பின்போதுநாட்டில் காணப்படும் சட்டக் கட்டமைப்பிற்குள், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமைவாக செயற்படுமாறு, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால், பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக் கோனிடத்தில் கோரப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அதில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யுக்திய சுற்றிவளைப்பின் நோக்கம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பொதுமக்களின் முறைப்பாடுகள், வெகுசன ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ள தகவல்கள் ஆகியன தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இதற்கமைய, சில விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி, பதில்பொலிஸ்மா ☞ 2

## 220 இலங்கை தொழிலாளர்கள் ஜோர்தானில் தொழில் இழப்பு

### ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டதால்

ஜோர்தானில்இரண்டு ஆடைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டதால், அங்கு தொழில்புரிந்த 220 இலங்கையர்களை சட்ட நடவடிக்கைகளின் பின்னர் நாட்டிற்கு அழைத்துவரநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பணியகம் விடுத்துள்ள அறிவிப்பில்,

ஜோர்டானில்,இரண்டு ஆடைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் இலங்கை தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் அவர்களை மீட்பது தொடர்பில்தேவையான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மூலம் மற்றும் ஜோர்தானில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகளுக்கு அமைச்சர் மனுஷ நாணயக்கார பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆடைத்தொழிற்சாலைகள்மூடப்படுவதால் தொழிலாளர்கள் எதிர் நோக்கும் சிரமங்கள் குறித்து ஜோர்தானில் உள்ள இலங்கை தூதரகத்தின் தொழிலாளர் நலப் பிரிவு, அந்நாட்டு தொழில் ☞ 10

## கந்தகாடு புனர்வாழ்வு மையத்திலிருந்து தப்பிய 26 பேர் தொடர்ந்து தலைமறைவு

வெலிகந்த-கந்தகாடு புனர்வாழ்வுமையத்தில் நேற்று இடம்பெற்ற மோதலின் போது தப்பிச்சென்றவர்களில் 28 பேர் இதுவரையில் சரணடையவில்லை என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ☞ 2

## கந்தகாடு நிர்வாகம் தொடர்பில் திங்கட் கிழமை முக்கிய கூட்டம்

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தின் நிர்வாக நடவடிக்கைகளை மீளமைப்பது தொடர்பில் நாளை திங்கட்கிழமை முக்கிய கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளதாக நீதி அமைச்சர் கலாநிதி. விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மோதல் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் தொடர்ச்சியாக கைதிகள் தப்பியோடுகின்ற நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றமை ☞ 2

## உட்கட்டமைப்புத் திட்டங்களை தொடங்க ஜப்பான் அரசு இலங்கைக்கு நிபந்தனை

இடைநிறுத்தப்பட்ட இலகுரயில்திட்டத்திற்கான செலவீனத்தினைமீளளிக்கும் பட்சத்திலேயே ஜப்பான் தனது உட்கட்டமைப்புத் திட்டங்களை மீள ஆரம்பிக்கும் என்று இலங்கை அரசிடம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ பயணமாக வருகைதந்துள்ளஜப்பான் நிதி அமைச்சர் சுசூகி ஷூனிச்ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவிடத்தில் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன்,அவர்எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன்நடத்திய சந்திப்பின்போதும்குறித்த விடயத்தினை அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் 1.5 பில்லியன் டொலர்கள் பெறுமதியானகொழும்பு இலகு ரயில்திட்டமானது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் இடைநிறுத் தப்பட்டது.

குறித்த திட்ட ☞ 2

## இனி இது .....

சமிந்த சபாநாயகரை சந்தித்து தனது பதவி விலகல் கடிதத்தை சபாநாயகரிடம் கையளித்துவிட்டே சபைக்குவந்தார். ஆனால்அதுவரை சமிந்தராஜினாமாசெய்யப்போவதாக சஜித்துக்கோ அல்லது கட்சியின் எந்தவொரு நிர்வாகிக்குமோ தெரிவிக்கவில்லை. சமிந்த நாடாளுமன்றத்திற்கு வந்தபோது, சஜித், கயந்த, கிரியெல்ல உள்ளிட்ட பலநாடாளுமன்றஉறுப்பினர்களும் அங்கு அமர்ந்திருந்தனர்.

சபையில் வைத்துத்தான் தான் அன்றைய தினமே தனது நாடாளுமன்றப் பதவியிலிருந்து விலகுகிறார்என்றசெய்தியைசமிந்த சஜித்திடம் தெரிவித்தார். அதைக் கேட்டதும் யாரும் எதிர்பார்க்காத வகையில்சஜித் ஆத்திரமடைந்தார். மிகவும்நெருக்கடியானநேரத்தில் எந்தவிதக் கலந்துரையாடலும் இன்றி இவ்வளவு தீவிரமான அரசியல்முடிவைசமிந்தஎடுத்ததே சஜித்தைக்கோவப்படுத்தியிருந்தது.

உண்மையில் இதுவொரு அசிங்கமான வேலை. இப்படி நடந்து கொள்ளாதீர்கள். இந்தக் கூட்டணியைக் கட்டியெழுப்ப நாங்கள் கடுமையாக உழைத்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில், யாருக்கும் தெரிவிக்காமல்நீங்கள்இதுபோன்ற முடிவுகளைஎடுக்கும்போதுநாங்கள் எப்படிமுன்னேற முடியும்? என்று சீறினார் சஜித்.

சஜித்துக்கு அமைதியாகப் பதிலளித்த சமிந்த விஜேசிறி, தனது பதவியை இராஜினாமா செய்வதற்கான தீர்மானத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய காரணங்களை விளக்கினார்.

''இல்லை சேர், கவனமாகப் பரிசீலித்தே இந்த முடிவை எடுத்தேன். ஏனென்றால் முன்பு நடந்ததை நினைத்து நான் மிகவும் ஏமாற்றமடைந்தேன். உங்களுக்கும் கட்சிக்கும் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை. ஆனால், அரசியலில் எனக்கு அதிருப்தி உள்ளது. மேலும் நான் ஆளும் தரப்புப் பக்கம் செல்லமாட்டேன். அரசியலில் இருந்து ஓய்வு பெறவும் மாட்டேன். என்னைசிறிதுகாலம்அமைதியாக, நிதானமாகஇருக்கஅனுமதியுங்கள். உங்களுக்காகவும் கட்சிக்காகவும் தொடர்ந்து பணியாற்றுவேன்'' என்றார்சமிந்தபவ்வியமாக. அதில் எந்த சந்தேகமும் வேண்டாம்..." என்று சமிந்த கூறியது சஜித்துக்கு மேலும் கோபத்தை ஏற்படுத்தியது.

''நான் ரணில் விக்கிரமசிங்க என்று நினைக்க வேண்டாம். என்னை முன்னாள் உந்தித் தள்ளி வேலை செய்ய எதிர்பார்க்க வேண்டாம். இதைஅனைவருக்கும் சொல்கிறேன். உழைத்தால், நேர்மையாக ஒன்றாக உழைப்போம். அதைவிட்டு இப்படியே போனால் நானும் சில முடிவுகளைஎடுக்கவேண்டிவரும்...' எனசஜித்கத்தியபோதுஅனைவரும் ஆச்சரியத்துடன் சஜித்தையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் உரையாற்றியசமிந்த, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தனக்கு அரசியலில் தந்தையைப்போன்று உதவினார் எனக் கூறி அவரைப் பாராட்டினார். அத்துடன்,செவ்வாய்கிழமைபிற்பகல் சஜித்துக்குசெய்தி அனுப்பியசமிந்த, மாலையில் செய்தியாளர்களைக் கூட்டி தனது நிலைப்பாட்டை விளக்குவார் என்றும் தெரிவித்தார். மாலைஇடம்பெற்றசெய்தியாளர்கள் சந்திப்பிலும் சஜித்தை வெகுவாகப் பாராட்டிய சமிந்த, எதிர்காலத்தில் மீண்டும் அரசியலுக்குத் திரும்பி வருவார் என்றும் தெரிவித்தார்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## இன அழிப்புக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வீகமாகக் கொண்ட லோகன் கணபதி. தமிழ்நாட்டில் நடந்த அயலகத் தமிழர்கள் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழன் இல்லாத நாடில்லை என்று சொல்வதற்கு இணங்க பல்வேறு நாடுகளில் இருந்தும் அதுவும் முக்கிய அரசியல் மற்றும் சிவலில் பொறுப்புகளில் இருப்பவர்கள் இம்மாநாட்டில் கலந்துகொண்டிருப்பது கண்டு பெருமைக் கொள்கிறேன். எமது தொப்புள் கொடி உறவுகள் வாழும் தமிழ்நாட்டிலே இந்த பொங்கல் திருநாளிலே இந்த மண்ணிலே நான்நிற்பதை இட்டு எல்லை கடந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கேகலந்துகொண்டிருப்போர் தத்தமது நாடுகளில் தாம் அடைந்த முன்னேற்றம், எதிர்கொள்ளும் சவால்களும், எதிர்காலத் திட்டமிடல் ஆகியவற்றை பரிமாறிக் கொள்வதற்கான கூடுகையாக இம்மாநாடு அமைந்திருக்கிறது. உலககெங்கும் தமிழ்... தமிழ் வெல்லும்... என்ற தொனிப் பொருளில் இந்த மாநாட்டில் அதன் அர்தத்தின் அடையளமாக உலகத் தமிழர்களில் ஒருவனாக ஈழத் தமிழராக இங்கு கலந்துகொள்வதில் நான் பெருமையடைகிறேன்.

தமிழரின் தொன்மையைக் கீழடியும், கந்தரோடையும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. 2500ஆண்டுகளுக்குமுன்பேநகர நாகரிகம் கண்டு, எழுத்தறிவு பெற்ற மக்கள்கூட்டத்தின் வழிவந்தவர்கள் நாம் என்பதை இந்த ஊர்கள் உலகறியச் செய்துள்ளன. அதேநேரத்தில், தமிழர்கள் கொத்துக் கொத்தாக கேட்பார் யாருமின்றி படுகொலை செய்யப்பட்டதன் குறியீடாக 'முள்ளிவாய்க்கால்' என்ற இடமும் அமைந்துள்ளது.

உலகம் எங்கும் 700 கோடிப் பேர் தமிழர்கள் வாழந்தாலும் இத் தாய் தமிழ்நாட்டில்தான் 2009 இல் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை தடுக்க வேண்டும்என்று18பேர்தீக்குளித்து தம்மை ஆகுதி ஆக்கினார்கள். அந்த நினைவுகள் நெஞ்சில் கனக்க தமிழ்நாட்டிற்கும் தமிழக மக்களுக்கும் உலக எங்கும் பரந்து வாழும் ஈழத் தமிழர்கள் சார்பில் எனது அன்பை நன்றியையும் பகிர்ந்து கொள்கின்றேன்.

நான்கனடாநாட்டுஒண்டாரியோ மாகாண நாடாளுமன்ற உறுப்பினராகஉங்கள்முன்இங்கே நின்று கொண்டிருந்தாலும் நான் பிறந்து வளர்ந்தது மேற்சொன்ன கந்தரோடையும்,முள்ளிவாய்க்காலும் அமைந்திருக்கும் ஈழ தேசம்தான். அதுதான் எனது பூர்வீகம் என்று கம்பீரமாக செல்வதில பெருமை கொள்கின்றேன்.

இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கை தாயகமாகக் கொண்ட, அரை நூற்றாண்டுக்கும் மேலாக சபிக்கப்பட்டவர்களாகவாழ்ந்துவரும் லட்சகணக்கான தமிழர்களில் நானும் ஒருவன். இன்றும் இன ஒடுக்குமுறைக்கு எதிராகவும், தமிழர்தேசத்திற்காகவும்தம்குரலை அணையவிடாமல் வைத்திருக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தில் 80களில் மாணவத் தலைவர்களில் ஒருவராக நானும் இருந்து சிறீலங்கா அரசின் இனவழிப்பினால் நாட்டை விட்டு உலகம் முழுவதும் சிதறி ஓடிய லட்சக்கணக்கானஈழத்தமிழர்களில் நானும் ஒருவனாக புலம்பெயர்ந்து கனடாதேசத்தில்தஞ்சமடைந்தேன். இன்று உங்கள் முன்னால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக நிற்கும்நிலைக்கு கனடா எனக்கான அனைத்து உரிமைகளையும் அங்கீகரித்துள்ளது.

இது என்னொருவனின் கதையல்ல, என்னைப் போல் பல இலட்சக்கணக்கில் அகதிகளாக உலகநாடுகளில்தஞ்சம்புகுந்துள்ள தமிழர்களின் கதையாகும். இந்த மண்ணிலும் நம் சகோதரர்கள் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் குடியுரிமை கேட்டு தலைமுறை தலைமுறையாக காத்திருக்கிறார்கள். அவர்களோடு ஒப்பிடும்போது ஒருவகையில் நான் ஆசிர்வதிக்கப்பட்டவன். கனடாவின் குடிமகனாகவும் மக்கள் பிரதிநிதியாகவும் உங்கள் முன் நிற்கிறேன். அகதி ஒருவர் மக்கள் பிரதிநிதியாக அமைச்சராக ஆக முடியும் என்ற அதியுன்னத செயற்பாட்டை முன்னெடுத்த உலகில்முதன்மையானஜனநயாக நாடாக நீதியின் முகமாக உள்ள கனடா தேசத்தில் என் குரலை வெளிப்படுத்தி வருகிறேன்.

உலக வரலாற்றில் முதல் தடவையாக என்னைப் போன்ற கனடா வாழ் மக்கள் அனைவரதும் முயற்சியோடு தமிழ் மரபுத் திங்கள் கனடா தேசத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை உலகத் தமிழர்களுக்கு கிடைத்துள்ள வரலாற்று மிக்க அங்கீகாரமும் சாதனையுமாகும். அத்துடன் இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை கனடா ஏற்றுக்கொண்டமைக்கு முன்னோடியாக தமிழ்நாடு சட்டமன்ற தீர்மானத்திற்கு தமிழக மக்கள் கொடுத்த பேராதரவுக்கும் நமது தோழமை கலந்த நன்றி உணர்வை இந்தச் சிறப்பு நாளில் வெளிப்படுத்திக் கொள்கிறேன்.

விண்வெளி ஆராய்ச்சி, மருத்துவம், தகவல்தொழில்நுட்பம், தொழில், வணிகம், கலை, இலக்கிய, இசை எனதமிழர்கள்கோலோச்சாத துறைகளே இல்லை உலகின் நான்கு திசைகளிலும் தமிழர்கள் மலையெனசாதனைகளைக்குவித்து வருகின்றனர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்தியாவிற்குள்ளும் சாதியப் பாகுபாடுகளுக்கு எதிராக சமூக நீதியைக் கடைப்பிடித்து ஒரு முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு தலைநிமிர்ந்து நிற்கிறது.. தமிழ்நாடு அரசு சமூகநீதி அரசு என்று புகழாரம் சூட்டும் அளவுக்கு வளர்ச்சிப் பரவலாக்கத்திற்கு உழைத்து வருகிறது.

இந்த சாதனைகளையும், வெற்றிகளையும் தாண்டி 21 ஆம் நூற்றாண்டில்இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் கூட்டமாகவும்நம் இனம் இருந்து வருகிறது. இது நமது தொன்மைக்கும் பண்பாட்டுச் செழுமைக்கும், நாகரிகத்திற்கும்,100மில்லியனுக்கும் மேற்பட்ட தமிழர்களினத்திற்கும் விடப்பட்டிருக்கும் சவால் ஆகும்.

உலகஅரங்கிலேஇனவழிப்புக்கு உள்ளானது மட்டுமின்றி அதற்கான நீதியை இன்னும் வென்றெடுக்காதவர்களாகவும் நாம் இருந்து வருகிறோம். ஆனால், நாம் நீதியின்பால்மிகுந்தபற்றுக்கொண்ட ஓர் இனம். சிலப்பதிகார நாயகி கண்ணகியைதெய்வமாகவழிபடும் இனம். நீதியின் குறியீடாக அவள் சென்னை மெரினாவில் கண்கள் சிவக்க நின்று கொண்டிருக்கிறாள். அந்த கண்ணகித்தாயின் வழிவந்த நாம், நம்மினத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட படுகொலைகளுக்கு நீதியைப் பெறத் தவறுவோமாயின் இந்தப் இந்த உலகில் வாழும் பிற சமூகத்தினர்தமிழர்களின்ஆளுமை பற்றி கேள்வி எழுப்புவார்கள்.

நான் பிறந்த மண்ணின் இன்றைய நிலையை சொல்லில் விவரிக்க முடியாது. தமிழினத்தின் பண்பாட்டு பெருமிதத்தோடு இந்த மாநாடு நடந்துக் கொண்டிருக்கும் இதே சமநேரத்தில் எமது தமிழர் தாயகத்தில் பண்பாட்டு படுகொலைகள் சத்தமின்றி அரங்கேறிவருகிறது. இதற்கு அண்மையசாட்சியாக முல்லைதீவு மாவட்ட நீதிபதி சரவணராசா அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் அவர் குடும்பத்தோடு தலைமறைவாகும் சூழல் உருவாகி இருக்கிறது என்றால் சாதாரண தமிழ் மக்களின் நிலைமை என்னவென்று இங்கு கூடியிருக்கும் நாம் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும் .

மேற்படி சம்பவம் ஆனது தமிழ் நீதிபதிக்குகூட அங்கு பாதுகாப்பு இல்லை என்ற நிலையை எடுத்துக்காட்டுகின்றது. மொத்தத்தில் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு எமது தாய்நாடு இரையாகிக் கொண்டிருக்கிறது. தமிழன் சறுக்கி விழுந்தாலும் ஒன்றுபட்ட உணர்வுடன் பீனிக்ஸ் பறவை போல் எழுந்தான் என்ற வரலாற்றை நாம் படைக்க வேண்டும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றதமிழ்நாட்டுப்புலவன்கணியன் பூங்குன்றனாரின் வரிகளுக்கு ஏற்ப உலகமெங்கும் சிதறி வாழ்கின்ற நாம் ஒரு நாடற்றவர்களாகி இனமழிந்து போகின்ற நிலைக்கு ஆளாவிடக்கூடாது. அதற்கு எம் தாய் தமிழ்நாடு துணை நிற்க வேண்டுமெனஎமது தாய்நிலத்திலே கண்ணீரோடு காத்திருக்கும் எமது உறவுகளின் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன்.

நான் தொடங்கிய இடத்திற்கே மீண்டும் வருகிறேன். தமிழனுக்கு எங்கு அநீதி இழைத்தாலும் அவன் திரும்பிப் பார்க்கும் இடம் தமிழ்நாடு தான். இந்த மண் தமிழினத்திற்காக பன்னாட்டரங்கில் குரல்கொடுப்பதில்தான்உலகெங்கும் பரவிவாழும் தமிழர்களின் மாண்பும் பாதுகாப்பும் இருக்கிறது. இனவழிப்புக்குஉள்ளானதமிழினம் நீதியை வென்றெடுப்பதில்தான் உலகத்தமிழர்களின் தன்மானமும் பாதுகாப்பும் உறுதிசெய்யப்படும். அந்தவரலாற்றுப்பணிக்குதமிழ்நாடு முதன்மையானபங்களிப்பைவழங்க வேண்டும்அதற்குஉறுதுணையாக உலகத்தமிழர்களும் அணிவகுத்து நிற்க வேண்டும் என்று பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன் என்று பணிவுடன்வேண்டிக்கொள்கிறேன்.

## கந்தகாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், குறித்த புனர்வாழ்வுநிலையத்தின்நிர்வாகம் சம்பந்தமாக நாம் கரிசனை செலுத்தியுள்ளோம்.

அதற்கமைவாக, நாம் எதிர்வரும் திங்கட்கிழமை விசேட கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளோம். அந்தக் கலந்துரையாடலின் அடிப்படையில் அடுத்தகட்டமாக விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளைமுன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

அதேநேரம்,தற்போதுநடைபெற்ற சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள்முன்னெடுக்கப்பட்டு அறிக்கையொன்றைக் கையளிக்குமாறு புனர்வாழ்வு ஆணையாளரிடத்தில் கோரியுள்ளேன் என்றார்.

## மின் கட்டணக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறுபட்ட தொகை அறவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இலங்கைப்பொதுப்பயன்பாடுகள்ஆணைக்குழு கட்டணக்குறைப்பு நியாயமாக நடைபெறு வதை உறுதி செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

## உட்கட்டமைப்புத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானது வாகனப்போக்குவரத்தின்போது காணப்படுகின்ற நெருக்கடிகளுக்கு தீர்வினை வழங்காது என்று குறிப்பிட்டு அத்திட்டம் நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்தச் சமயத்தில் 285 மில்லியன் டொலர்கள் முதற்கட்ட செயற்பாட்டுக்காக வழங்கப்படுவதற்கான ஒப்பந்தம் இலங்கை நிதி அமைச்சின் செயலாளருடன் ஜப்பான் மேற்கொண்டிருந்தது.

அந்த வகையில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் 0.1 சதவீத வட்டியுடன் 12 வருடங்கள் கடன் வழங்குவதற்கான எல்லையாக வரையறுக்கப்பட்டுள்ளதோடு 40 வருடங்களில் அதனை மீளச் செலுத்த வேண்டும் என்றே ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கந்தகாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தர்ஷன ஹெட்டியாராச்சி

வெள்ளிக்கிழமை பிற்பகல் கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் மதிய உணவு தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினையின் அடிப்படையில் இரு குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில் 29 பேர் காயமடைந்தனர். அவர்களில் 26 பேர் வெலிகந்த ஆதார வைத்தியசாலையிலும் மூன்று பேர் பொலன்னறுவை பொது வைத்தியசாலையிலும்தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்றனர். இந்த நிலையில், தப்பிச்சென்ற 64 பேர் இதுவரைகைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

## சட்டத்திற்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபருக்குமுக்கியஅறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த அறிவுறுத்தல்களில் மிக முக்கியமாகநாட்டில்காணப்படுகின்ற சட்டக்கட்டமைப்புக்களைப்பின்பற்றிச் செயற்படுதலாகும் – என்றுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# நாமலுக்கு அரச இல்லத்தை எவ்வாறு வழங்க முடியும்?

## அநுரகுமார கேள்விக்கணை



ஜனாதிபதியின் வெளிநாட்டு சுற்றுப்பயணங்களுக்கு 2000 லட்சம் ரூபாவை மேலதிகமாக ஒதுக்குவதன் காரணம் என்ன? நிதி ஒழுக்கத்தை பற்றி பேசும் ஜனாதிபதி முதலில் நிதி ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அரசியல்வாதிகள்சுகபோகமாகவாழ்வதற்காகவே வரி அறவிடப்படுகிறது. நாமல் ராஜபக்சக்கு எவ்வாறு அரச இல்லத்தை வழங்க முடியும்.

ராஜபக்சர்கள் இன்றும் அரச இல்லங்கள் வாழ்கிறார்கள். இவர்களுக்கு வெட்கம் என்பதொன்று இல்லையா என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க கடுமையாக சாடினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நாடாளுமன்றத்துக்கு குறைநிரப்பு பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடி, நிதி ஒழுக்கம் பற்றி அரசாங்கம் பாடம் கற்பிக்கிறது.

இவர்களின் நிதி ஒழுக்கத்தை சற்று ஆராய்ந்து பார்ப்போம். ரெலிகொம் நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசமுயற்சியாண்மைதிணைக்களத்துக்கு 13 ஆயிரம் லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த 13 ஆயிரம் லட்சம் ரூபா எவ்வாறு செலவு செய்யப்பட்டது என்பதை நாடாளுமன்றத்துக்கு அறிவியுங்கள். இதில் நிதி ஒழுக்கம் உள்ளதா ?

இந்த குறை நிரப்பு பிரேரணையில் ஜனாதிபதியின் மேலதிக செலவுகளுக்காக 2000 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள், எரிபொருள் மற்றும் வாகன பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட மானியத்தின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு 2000 லட்சம் ரூபா மேலதிகமாக ஒதுக்கப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

வரவு செலவு திட்டத்தின் போது ஜனாதிபதியின் வெளிநாட்டு பயணங்கள்,எரிபொருள் மற்றும் வாகனங்களுக்காக நிதி ஒதுக்கப்படுகிறது.

ஜனாதிபதிக்கானசெலவினங்கள்நாட்டுக்குபாரிய சுமை என்பதை பலமுறை குறிப்பிட்டுள்ளோம். இதற்கு மேலதிகமாக 2000 லட்சம் ரூபாவை ஒதுக்க குறை நிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முதலில் ஜனாதிபதி நிதி ஒதுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற காலத்தில் இருந்து முழு நாட்டையும் வலம் வருகிறார். இலங்கையில் எந்த அரச தலைவர்களும் இவ்வாறு உலகை சுற்றவில்லை.

மரண வீட்டுக்கு செல்கிறார். திருமண வீட்டுக்கு செல்கிறார்.அல்லது உலக நாடுகளின் அரச தலைவர்கள் பங்குப்பற்றாத மாநாடுகளில் உரையாற்றுகிறார்.முழு உலகையும் சுற்றி விட்டு மீண்டும் உலகம் சுற்ற 2000 லட்சம் ரூபா கேட்கிறார்.

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கும், சீருடை வழங்குவதற்கும் மானியம் ஒதுக்கப்படவில்லை.

பரீட்சை வினாத்தாள் திருத்தும் ஆசிரியர்களின் கொடுப்பனவு அதிகரிக்கப்படவில்லை. ஆனால் ஜனாதிபதி உல்லாச பயணம் செல்ல 2000 லட்சம் ரூபா ஒதுக்கப்படுகிறது.

ஆகவே இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றமும் சிந்திக்க வேண்டும், ஜனாதிபதியும் சிந்திக்க வேண்டும்.

பாடசாலை உபகரணத்தில் இருந்து அத்தியாவசிய உணவு பொருள்கள் வரை வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.வரி வருமானத்தை பெற்றுக்கொண்டு ஜனாதிபதி உலகை சவாரி வருகிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி செயலகத்தில் ,ருந்து நாடாளுமன்றத்துக்கு வரும் போது மஹிந்த ராஜபக்ஷ விஜேராம மாவத்தையில் இருந்து நாடாளுமன்றத்துக்கு வரும் போது இவர்களின் வாகன பேரணியுடன் அம்புலன்ஸ் வருகிறது.

இவர்கள் படுக்கை நோயாளிகளா? ஆனால் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளில் அம்புலன்ஸ் இல்லை. இவ்வாறான செயற்பாடுகளின் போது மக்கள் எவ்வாறு திருப்தியுடன் வரி செலுத்துவார்கள்.

அரசியல்வாதிகள்சுகபோகமாகவாழ்வதற்காகவே வரி அறவிடப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ எப்படி அரச உத்தியோக பூர்வ இல்லத்தில் வாழ முடியும்.

நாமல் ராஜபக்ச அரச இல்லத்தில் வாழ்கிறார்.அவரது தந்தை,சித்தப்பா உட்பட குடும்பமும் அரச இல்லத்தில் வாழ்கிறார்கள். வெட்கமில்லையா? நாமலுக்கு எவ்வாறு அரச இல்லம் வழங்க முடியும். முடிந்தால் நாடாளுமன்றத்தில் குறிப்பிடுங்கள்.

கப்பலில் களியாட்டம் நடத்தியது தற்போது பேசுபொருளாக உள்ளது. பகலில் 20 மீற்றர் தூரம் கூட தெரியாதவர்கள் துறைமுகத்தை பார்வையிட சென்றார்களாம். அதுவும் இரவில் யாரை ஏமாற்றுகின்றீர்கள். நாட்டு மக்களின் இரத்தத்தை உறிஞ்சும் வகையில் வரியை அதிகரித்து விட்டு அரச நிதியை மோசடி செய்கின்றீர்கள்.

2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதியின் செலவுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு நேர்ந்தது என்ன, ஏன் மேலதிகமாக 2000 லட்சம் ரூபா குறை நிரப்பு பிரேரணை ஊடாக கோரப்படுகிறது என்பதை நாடாளுமன்றத்துக்கு தெளிவுபடுத்த வேண்டும். இந்தக் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பார்கள் என்பதை பார்த்துக் கொண்டிருக்கிறேன். - என்றார். (05)

# அலவி மௌலானா சனசமூக நிலையத்தை ஆக்கிரமிக்க என்றும் இடமளிக்கக்கூடாது

## சஜித் அரசாங்கத்திடம் கோரிக்கை

அலவி மௌலானா சனசமூக நிலையத்தை ஆக்கிரமிக்க யாருக்கும் இடமளிக்க முடியாது. அதனால் இந்த விடயம்தொடர்பாகநடவடிக்கைஎடுத்து சனசமூக நிலையத்தை அந்த பிரதேச மக்கள்பயன்படுத்தமுடியுமானசூழலை ஏற்படுத்திக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்தார். நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

கொழும்பு 10 சுதுவெல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள அலவி மௌலானா சனசமூக நிலையம் முன்னாள் மாநகரசபை உறுப்பினர் ஒருவரால் பலவந்தமாக ஆக்கிரிமிக்கப்பட்டிருக்கிறது.

சனசமூக நிலையம் பொது மக்களின் நலனோம்புகளுக்காகப் பயன்படுத்தப்படும் கட்டடம் என்பது யாரும் அறிந்த விடயம். இந்த கட்டடம் மாகாணசபைக்குஅல்லதுஉள்ளூராட்சி மன்றத்துக்கு கீழே இருந்து வருகிறது.

கொழும்பு மாநகரசபைக்கு கீழ் இருந்து வரும் அலவிமௌலானா சனசமூக நிலையம் அமைந்துள்ள பூமி, முன்னாள் மாநகர சபை உறுப்பினர் கித்சிறி ராஜபக்ஷவின் தலையீட்டினால் மதில், நுழைவாயில் அமைத்து அதனை பலவந்தமாக ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது.

குறித்த சனசமூக நிலையம் அந்த பிரதேசத்தில் வருமானம் குறைந்த மக்களின் விழாக்களுக்காக குறைந்த கட்டணத்துக்குவழங்கப்பட்டுவருகிறது.

இந்த நிலைய பூமி பிரதேசம் முன்னாள்மாநகரசபைஉறுப்பினரின் தலையீட்டினால் ஆக்கிரமித்திருப்பது தொடர்பாக மாநகர ஆணையாளர் மற்றும்பொறுப்புவாய்ந்த அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்துள்ளபோதும் அதற்கு கித்சிறி ராஜபக்ச தலையீடு செய்துள்ளார்.

அதேபோன்றுஜனாதிபதிசெயலகத்தின் அதிகாரி ஒருவரின் அழுத்தம் காரணமாக இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறது.

எனவே அலவிமௌலானா சனசமூக நிலையத்தை யாருக்கும் ஆக்கிரமிக்க இடமளிக்காமல் வசதி குறைந்த அந்த பிரதேச மக்களின் நலனோம்புகளுக்காக மீண்டும் பயன்படுத்த முடியுமான சூழலை ஏற்படுத்திக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (05)

# கனடா தூதர் எரிக்வோல்ஸ் சந்திரகுமாரைச் சந்தித்தார்!

கிளிநொச்சிக்கு விஜயம் செய்த இலங்கைக்கான கனடா தூதுவர் எரிக்வோல்ஸ் மற்றும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினருமான மு. சந்திரகுமாருக்கும் இடையில் கிளிநொச்சியில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பு சமத்துவக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உரையாடிய விடயங்கள் -

யுத்தத்திற்கு பின்னராக காலப்பகுதியில் இனங்களுக்கிடையில் கட்டியெழுப்பப்படவேண்டியநல்லிணக்கம் பற்றியும், முன்னாள் பேராளிகள், பெண்தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் வாழ்வை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் பற்றியும் வலியுறுத்தினோம்.

குறிப்பாக இங்குபோதுமான தொழில் வாய்ப்புக்கள் இல்லாமையால் ஏராளமான இளைஞர் யுவதிகள் கனடாஉள்ளிட்டபலநாடுகளுக்குபுலம் பெயர்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

எனவே அவர்கள் இங்கு தொழில்களை பெற்று வாழ்வதற்குரிய முதலீடுகளை மேற்கொண்டு தொழில் துறைகளை ஆரம்பிக்க கனடா முன்வரவேண்டும்என்றும்தெரிவித்திருந்தோம் . - என்றார். (05)

# யாழ்ப்பாணம் கோப்பாயில் கசிப்புடன் நால்வர் கைது!

யாழ். கோப்பாய்பொலிஸ்பிரிவிற்குட்பட்ட திருநெல்வேலி சந்தையில் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட செருப்பு தைக்கும் நபர் ஒருவரை யாழ்ப்பாண மாவட்டபொலிஸ்புலனாய்வுபிரிவினர் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வுபிரிவுக்குகிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது ,அவர் இன்னொரு இடத்தில் கசிப்பை வாங்கி வந்து தினமும் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளார் என்பது முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

பின்னர் கோப்பாய் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் உதவியுடன் விற்பனை செய்யும் இடத்தை சுற்றிவளைத்த பொழுது கோப்பாய் மத்தி சூசியப்பர் கோவிலடியில் பெண்ணொருவர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து 19 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைக்காக அவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# ரணிலையும் சஜித்தையும் நணைக்க வெளிநாட்டு தூதர்கள் முயற்சிப்பதாக தெரிவிக்கப்படும் செய்தியில் உண்மை இல்லை

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



*ரணிலையும் சஜித்தையும் இணைக்க வெளிநாட்டு தூதுவர்களின் ஊடாக முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என வெளியாகும் செய்திகளில் எந்த உண்மையும் இல்லை. அதனை முற்றாக நிராகரிக்கிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.*

*நாடாளுமன்றத்தில் விசேட கூற்றை முன்வைத்துகுறிப்பிடுகையிலேயேஇவ்வாறு தெரிவித்தார்.*

*இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -*

*உள்நாட்டு, வெளிநாட்டு பிரதிநிதிகளைப் பயன்படுத்தி சஜித்தையும் ரணிலையும் இணைக்க பெரும் அரசியல் தந்திரங்கள் முன்னெடுக்கப்படுவதாக சமூக வலைத்தளங்கள் மற்றும் சில ஊடகங்களில் பரப்பப்படுகின்றன.*

*வெளிநாடுகளின் ஆண், பெண் தூதுவர்களும் அவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுவதாகவும் தகவல்கள் பரப்பப்படுகின்றன. வதந்திகள் பரப்பப்படுகின்றன. ஆனால் வெளிநாட்டு ஆண், பெண் தூதுவர்கள் எமது நாட்டின் உள்ளக அரசியல் திருமணங்களுக்காக என்னுடன்கதைத்ததில்லை. கதைக்கப்போவதும் இல்லை. அவை முழுப்பொய்யாகும். பணம் கொடுத்தே இவ்வாறான பொய் செய்திகள் பரப்பப்படுகின்றன. இந்த பொய்யை மக்களிடையே பரப்புவதை உடனடியாக நிறுத்துங்கள் என்று கோருகின்றேன். எங்களுக்கு அரசியல் டீல்களை போட வேண்டிய அவசியமில்லை. பொதுமக்களின் முழுமையான ஆதரவு எமக்கு இருக்கிறது. எங்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தை அமைக்க நடவடிக்கை எடுப்போம். அதற்கான மக்களின் ஆசிர்வாதம் எமக்கு எப்போதும் இருக்கிறது. - என்றார். (05)*

# யாழ்.காரைநகரை பூர்வீகமாகக் கொண்ட இளைஞன் லண்டனில் குத்திக் கொலை!

*லண்டனில்தமிழர்கள் அதிகம் வாழ்ந்து வரும் ட்விக்கன்ஹாம் பகுதியில் தமிழ் இளைஞன் ஒருவர் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.*

*இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம், காரைநகரை சேர்ந்த இளைஞனே கொலை செய்யப்பட்டுள்ளார்.*

*இந்த கத்திக்குத்து தாக்குதல் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும்சம்பவம்தொடர்பில் 4 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.*

*இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -*

*குறித்த இளைஞன், பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வரும் நிலையில் கடந்த திங்கட்கிழமை வீடு திரும்பும் போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*இளைஞன் ரயிலில் பயணிக்கும் போது பின்னால் வந்தவர்களால் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.*

*(05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## திட்டம் தீட்டப்படவேண்டும்

அண்மையில் வடக்குக்கு வந்திருந்த அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வடக்கை அபிவிருத்தி செய்வதற்கானதுறைகளைஅடையாளம்காட்டியிருந்தார். புதுப்பிக்கத்தக்க மின் சக்தித்துறை, கல்வித்துறை, சுற்றுலாத்துறை ஆகியவற்றில் வடக்கை விரைவாக அபிவிருத்தி செய்ய முடியும் என்று அவர் கூறினார்.

இவற்றில் கல்வி மற்றும் சுற்றுலாத்துறை ஆகிய இரண்டும் அரசமைப்பின் கீழ் மாகாணங்களுக்குக் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரப் பகிர்வுப் பட்டியலில் இடம்பெற்றிருப்பதால் அவற்றை அரசுத் தலைவர் சொல்வதைப் போன்று மாகாணங்களால் அபிவிருத்தி செய்ய முடியும். அந்த வகையில் சுற்றுலாத்துறை விடயத்தில் வடக்கு மாகாணம் தற்போது அக்கறை செலுத்தி வருகின்றது.

யாழ்ப்பாணம் பன்னாட்டு வானூர்தி நிலையம் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து வடக்கு மாகாண சுற்றுலாத்துறையைமேம்படுத்திஇந்தியசுற்றுலாவிகளைக் கவர்வதில் முதற்கட்டக் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், கல்வித்துறையில் புலம்பெயர் தமிழர்கள்சிலர்தன்னாவத்தோடுஉள்நுழைந்திருப்பதைத் தவிர, மாகாண சபையாக எந்தத் திட்டமிடல்களையும் இதுவரையில் முன்னெடுக்கவில்லை. அதன் மீதும் அக்கறை செலுத்தப்படவேண்டும்.

அரசுத் தலைவர் சொன்ன துறைகளில் மற்றொன்று புதுப்பிக்கத்தக்க மின் சக்தி உற்பத்தித் துறை. அதாவது சூரிய கல மின் உற்பத்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்திகளைப் பற்றியே அவர் பேசினார். வடக்கிற்குக் கிடைக்கக்கூடிய மிகப் பெரிய இயற்கை வளம் என்பது இந்த சூரிய ஒளி, காற்று மற்றும் கடல்தான். இந்த இயற்கை வளத்தைப் பயன்படுத்தி எமது தேவையையும் பூர்த்தி செய்துகொண்டு அதனை எமது ஏற்றுமதிப் பொருளாதாரநலன்களுக்காகவும்பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அது குறித்து மாகாண சபை சரியான திட்டமிடல்களை மேற்கொள்ளவேண்டும்.

இதுவரையில் இந்தப் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியை கொழும்பு அரசே தனது முழுமையான கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. வடக்கில் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டாலும் அது தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டு கொழும்பினாலேயே கட்டுப்படுத்தப்படுகின்றது என்பதுடன் அதற்கான பணக் கொடுக்கல் வாங்கல்களும் தேசிய திட்டத்தின் கீழ்ழேயே இருக்கின்றன. மாகாணத்திற்கெனத் தனியான திட்டங்கள் எவையும் இல்லை.

இப்போது அரசுத் தலைவர் சொல்வதைப் போன்று வடக்கின் பொருளாதார அபிவிருத்திக்கு இந்த புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி ஆற்றலைப் பயன்படுத்த முடியும் என்றால் அது குறித்து ஆய்வுகளை நடத்தி திட்டங்களை முன்னெடுப்பது குறித்து வடக்கு மாகாணம் கவனம் செலுத்த வேண்டும். அரசுத் தலைவர் சொல்வதைப் போன்று மாகாணத்தின் பொருளாதாரத்திற்குள்புதுப்பிக்கத்தக்கமின்உற்பத்தியை எப்படிக் கொண்டு வருது என்பது தொடர்பில் தீவிரமாக ஆராயப்படவேண்டும்.

அப்போதுதான் இந்த இயற்கைச் சக்தியாற்றலைப் பயன்படுத்தி வடக்கின் பொருளாதாரத்தை உயரத்த முடியும். இயற்கைக் கொடைகளான காற்று, சூரிய ஒளி, கடல் அலைகள் என்று மூன்றையும் பயன்படுத்தி தாராளமாக மின் உற்பத்தியை மேற்கொள்ள முடியும். எனவே அவற்றைப் பயன்படுத்தி ஏற்றுமதிக்குமான மின் உற்பத்தியை எப்படி மேற்கொள்வது என்பது தொடர்பில் திட்டங்களை வகுத்துச் செயற்படவேண்டியது வடக்கு மாகாண சபையின் கடமை. உரிய தரப்புக்கள் அது குறித்துக் கவனம் செலுத்தவேண்டும். கொழும்பின் கட்டுப்பாட்டுக்கு அப்பால், இந்த விடயத்தை மாகாணப் பொருளாதாரத்தின் கீழ் எப்படி மேற்கொள்வது என்பதற்கான திட்டங்கள் குறித்து ஆராயப்படவேண்டும் வடக்கின் நலன் கருதி.






## அரசியல் களத்தில் கிரிக்கெட்:

# வங்கதேச தேர்தலில் கப்டனின் வெற்றி

ஐங்கரன் விக்கினேஸ்வரா







பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தலைவர் கிப் அல் ஹசன் பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத் தொகுதியில் பெரும் வெற்றி பெற்றார்.

அந்நாட்டுதேசியகிரிக்கட்அணியைவழிநடத்தும் பல்துறை வீரர் கிப் அல் ஹசன். பங்களாதேஷ் மேற்கு நகரத்தில் உள்ள மகுரா தொகுதியில் தனது போட்டியாளரை 150,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.

கிரிக்கெட் கப்டனாகத் தனது வேலையை வெற்றிகரமாகச் செய்ய முடிந்த அதேநேரம், அவர் தனது தேர்தல் பரப்புரையில் கவனம் செலுத்த விளையாட்டிலிருந்துசிறிது இடைவெளிஎடுத்தாலும், அவர் ஓய்வு இன்னமும் பெறவில்லை.

பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான ஆளும் அவாமி லீக் கட்சியின் வேட்பாளராக இவர் போட்டியிட்டார். கப்டன் கிப்பின் சாதனைகளில், சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் கூற்றுப்படி, ஒரே நேரத்தில் கிரிக்கெட்டின் மூன்று வடிவங்களில் ஒவ்வொன்றிலும் சகலதுறை வீரருக்கான (புயியி யூலிற்ஜ-ளஷ) முதல் இடத்தைப் பிடித்தவர் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார்.




### இந்திய அரசியலில் கிரிக்கெட் வீரர்கள்



கிரிக்கெட்டில் இருந்து அரசியலுக்கு வந்த இந்திய வீரர்கள் இன்னமும் பல பதவிகளில் உள்ளனர். முன்னாள் கப்டன் முகமது அசாருதீன் 2009 ஆம் ஆண்டில், காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கினார். 2009 பொதுத் தேர்தலில் உத்தர பிரதேசத்தின் மொராதாபாத்தில் அசார் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் மன்சூர் அலி கான் பட்டோடி அரசியலில் நுழைந்து பதவிக்கு வந்த முதல் கிரிக்கெட் வீரர்களில் ஒருவர். இந்தியாவின் சிறந்த கிரிக்கெட் கப்டன்களில் ஒருவரான இவர், இரண்டு மக்களவைத் தேர்தல்களில் போட்டியிட்டார். ஆனால் இரண்டு முறையும் தோல்வியடைந்தார். இதனால் அரசியலில் இருந்து பின்னர் வெளியேறினார்

1983 உலகக் கோப்பை வென்ற அணியின் முன்னாள் வீரரான கீர்த்தி ஆசாத், பீகாரில் உள்ள தர்பங்கா தொகுதியில் பாஜக வேட்பாளராகப் போட்டியிட்டு மூன்று தேர்தல்களில் வெற்றி பெற்றார். பிப்ரவரி 2019இல் அவர் முறையாக காங்கிரஸில் நுழைந்தார்.

### பஞ்சாபில் நவ்ஜோத் சிங் சித்து


பஞ்சாப் அரசில் அமைச்சராக இருந்த நவ்ஜோத் சிங் சித்து, 200இல் பாஜக சார்பில்மக்களவைக்கு போட்டியிட்டுதனது அரசியல்வாழ்க்கையைத்தொடங்கினார். இந்தியாவுக்காக 51 டெஸ்ட் மற்றும் 136 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள சித்து, பின்னர் காங்கிரஸில் சேர்ந்தார்.

இந்திய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரானஹர்பஜன்சிங், பஞ்சாபிமாநிலங்களவை உறுப்பினர் ஆவார். மார்ச் 2022இல், அவர் ஆம் ஆத்மி கட்சியில் சேர்ந்தார். டெஸ்ட் போட்டிகளில் 400 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். 236 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 269 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இரண்டு டெஸ்ட் சதங்கள் மற்றும் ஒன்பது அரை சதங்களும் அடித்திருக்கிறார்.

1000 டெஸ்ட் ஓட்டங்களை அதிவேகமாக எடுத்த இந்திய டெஸ்ட் கிரிக்கெட் வீரர் வினோத் காம்ப்ளி. அவரது துணிச்சலான துடுப்பாட்டத்திற்குப் பெயர் பெற்றவர். 1993இல் ஜிம்பாப்வேக்கு எதிராக அவர்

(7ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir





# சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்தார் ஜப்பானின் நிதி அமைச்சர்

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜப்பானின் நிதி அமைச்சர் சுசுகி ஷுனிச்சி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் சந்தித்தார்.

இந்த சந்திப்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குானி ரோஹணதீர மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிட்டயாகே ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, கருத்துத் தெரிவித்த ஜப்பானின் நிதி அமைச்சர் குறிப்பிடுகையில், ஜப்பான் மற்றும் இலங்கைக்கு இடையில் நீண்ட கால நட்புறவு காணப்படுவதாகவும் இலங்கையின் பொருளாதார உறுதிப்பாடு தொடர்பில் ஜப்பானின் ஆதரவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். அத்துடன், இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவை மேலும் விருத்திசெய்துகொள்வது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், இலங்கை தொடர்பில் ஜப்பான் வழங்கும் ஆதரவுகளுக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதன்போது நன்றிகளைத் தெரிவித்ததுடன் எதிர்காலத்திலும் ஜப்பானின் ஆதரவை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, சுசுகி ஷுனிச்சி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படும் உறுப்பினர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார். (05)

# கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் மோதல்; 25 கைதிகள் காயம்; 60 பேர் தப்பிச்சென்றனர்!

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இரு குழுக்களுக்கிடையில் வெள்;ளிக்கிழமை இடம்பெற்ற மோதல் காரணமாக 25 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தின்போது சுமார் 60 கைதிகள் தப்பிச் சென்ற நிலையில் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தப்பியோடிய கைதிகளை கைது செய்வதற்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து விசேட நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர் எனப் பொலன்னறுவை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிரான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைக்கு சோமாவதி பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு இடையூறாக இருப்பதாக அவர் கூறியுள்ளார். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rorty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir



# தெஹிவளையில் நிறுவப்படும் வைத்தியசாலையை பார்வையிட்டார் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்

இலங்கை மன்ற உறுப்பினர்களால் தெஹிவளையில் நிர்மாணிக்கப்படும் புதிய வைத்தியசாலையை வெள்ளிக்கிழமை பார்வையிட இலங் கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் சென்றுள்ளார்.

இது குறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் -

இலங்கைமன்றஉறுப்பினர்களால்40மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் முழு வசதிகளுடன் கூடிய தீவிர சிகிச்சைப் பிரிவு, பிறந்த குழந்தை தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் கதிரியக்கப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கி வைத்தியசாலை நிர்மாணிக்கப்படுகிறது.

இங்கு பணிபுரியும் மருத்துவ பணியாளர்களுக்கு திறன் மற்றும் பயிற்சியை வளர்ப்பதற்கான வழிகளை திட்ட மேலாளர்களுடன் நான் கலந்தாலோசித்தேன்.

இலங்கையின் எதிர்காலத்திற்கான இலங்கை - அமெரிக்கர்களின் தாராள மனப்பான்மையும் அர்ப்பணிப்பும் எமது இருநாடுகளுக்கும் இடையிலான வலுவான மக்களுக்கும் இடையிலான உறவுகளுக்கு ஈர்க்கக்கூடிய எடுத்துக்காட்டாக குறித்த வைத்தியசாலை திகழ்வதாக அவர் தெரிவித்துள்ளார். (05)

# மின் இணைப்பை துண்டிக்கச் சென்றோரை தடுத்து வைத்து நாய்கள் மூலம் அச்சுறுத்தல்

## இராணுவ சிப்பாயின் மனைவி உட்பட இருவர் கைது

மின்சாரத்தை துண்டிக்க சென்ற மின்சாரசபை ஊழியர்கள் இருவரைத் தடுத்து வைத்து நாய்களை வைத்து அச்சுறுத்தியதாகக் கூறப்படும் இராணுவசிப்பாயின் மனைவி உட்பட மற்றுமொருவரை மொரந்துடுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மொரந்துடுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இராணுவ சிப்பாயின் மனைவி மற்றும் தாய் ஒன்றாக வசித்து வருவதுடன் அவர்களது வீட்டிற்கு அருகிலேயே இராணுவ சிப்பாயின் மனைவியின் சகோதரியின் வீடும் அமைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவசிப்பாயின் மனைவியின் சகோதரி ஜப்பான் நாட்டில் வசிப்பதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் ஜப்பான் நாட்டில் வசிக்கும் இராணுவ சிப்பாயின் மனைவியின் சகோதரியின் வீட்டு மின்சாரத்தை துண்டிப்பதற்காக 4 மின்சார சபை ஊழியர்கள் வந்துள்ளனர்.

இராணுவசிப்பாயின் தாய் மின்சார சபை ஊழியர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதையடுத்து இரு ஊழியர்கள் மாத்திரமே வீட்டிற்குள் செல்ல அனுமதிக்கப்பட்ட நிலையில் மற்றைய ஊழியர்கள் அவர்கள் பயணித்த வாகனத்தில் இருந்துள்ளனர்.

வீட்டிற்குள் வந்த ஊழியர்கள் இராணுவ சிப்பாயின் மனைவியின் சகோதரி வீட்டு மின்சாரத்தைத் துண்டித்துள்ளனர்.

இதனையடுத்து இராணுவ சிப்பாயின் மனைவி தனது சகோதரிக்கு தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்து இது தொடர்பில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இராணுவசிப்பாயின் மனைவியின் சகோதரி இணைய-வழி மூலமாக ஏற்கனமே மின்சார கட்டணத்தை செலுத்தி விட்டதாகக் கூறி கட்டண சீட்டின் புகைப்படத்தை கையடக்கத்தொலைபேசிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பில் இராணுவ சிப்பாயின் மனைவி ஊழியர்களிடம் கூறியும் அவர்கள் அதனைத் தவிர்த்துள்ளனர்.

இதனால் கோபமடைந்த இராணுவ சிப்பாயின் மனைவி ஊழியர்களை அடைத்து வைத்து துண்டித்த மின்சார இணைப்பை மீண்டும் வழங்குமாறும் இல்லையெனில் நாய்களை வைத்து கடிக்க செய்வதாகவும் கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரந்துடுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தைப் பொங்கல் தினத்தன்று கைதிகளை பார்வையிட வசதி

தைப்பொங்கல் பண்டிகையையொட்டி, எதிர்வரும் 15ஆம் திகதி, இந்து மதத்தைப் பின்பற்றும் கைதிகளைப் பார்வையிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்தத் தினத்தில் இந்து மதக் கைதிகளுக்கு தற்போதுள்ள விதிமுறைகள் மற்றும் முறையான சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளின் கீழ் ஒருவருக்கு ஏற்றளவு உணவுப் பொதிகள் மற்றும் இனிப்புகளை அவர்களின் உறவினர்கள் வழங்க அனுமதிக்கப்படுவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

## யுக்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ்நிலையபொறுப்பதிகாரிகள் மற்றும் குற்றப்புலனாய்வு பொறுப்பதிகாரிகள்ஆகியோர்யுக்திய நடவடிக்கைளில் முழுமையாக தங்களது பங்களிப்பைச் செய்யவேண்டும்.

இதுகால வரையிலான ஆய்வுகளின்பிரகாரம்குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 42,248 பேர் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களின் பட்டியல் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யுக்திய நடவடிக்கையின் கீழ் எதிர்வரும் ஒரு மாதத்திற்குள் தமது பொலிஸ் பிரிவை உள்ளடக்கிய வகையில் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு, பட்டியலிடப்பட்டுள்ள சந்தேகநபர்களைக் கைது செய்வதற்காக அனைத்துக் குற்றப்புலனாய்வு அதிகாரிகளும் 24 மணித்தியால சேவையில் ஈடுபடவேண்டும் என்றுள்ளது.

## போதைப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுகள் மற்றும் தடுப்புக்காவல், மோசமான முறையில் நடத்துதல், சித்திரவதை செய்தல் மற்றும் பொது இடங்களில் ஆடைகளை அகற்றுதல் உள்ளிட்ட மோசமானபலமீறல்களுக்குமக்கள்உட்படுத்தப்பட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், சந்தேகநபர்கள் பொலிஸ் அதிகாரிகளின் மிரட்டலை எதிர்கொண்டனர் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட பொதுச் சுகாதாரக் கொள்கைகளுக்குப் பதிலாக, இலங்கையில் உள்ள அதிகாரிகள் நாட்டின் போதைப்பொருள் பிரச்சினைக்கு அதிக பாதுகாப்பு அடிப்படையிலான பதிலைக் கடைப்பிடிப்பது குறித்து நாங்கள் மிகவும் கவலைப் படுகிறோம்.

டிசெம்பர் 17 முதல் போதைப்பொருள் தொடர்பான விடயங்களில் 29,000 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது, சிலர் மோசமான முறையில் கையாளப்பட்டு, சித்திரவதைக்குஉட்படுத்தப்பட்டதாக குற்றச்சாட்டுகள் உள்ளன.

பாதுகாப்புப் படையினர், தேடுதல் கட்டளைகள் இன்றி சோதனைகளை நடத்தினர் எனவும், சந்தேகத்திற்கிடமான போதைப்பொருள் விற்பனையாளர்கள் மற்றும் பயனர்களை கைது செய்தனர் எனவும், நூற்றுக்கணக்கானோர் இராணுவத்தால் நடத்தப்படும் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பப்பட்டனர் எனவும் கூறப்படுகிறது.

இந்தநடவடிக்கைகளின்போதும் அதற்குப் பின்னரும், அங்கீகரிக்கப்படாத தேடுதல்கள், தன்னிச்சையான கைதுகள் மற்றும் தடுப்புக்காவல், மோசமான முறையில் நடத்துதல், சித்திரவதை செய்தல் மற்றும் பொது இடங்களில் ஆடைகளை அகற்றுதல் உள்ளிட்ட மோசமான பல மீறல்களுக்கு மக்கள் உட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், சந்தேகநபர்கள் பொலிஸ் அதிகாரிகளின் மிரட்டலை எதிர்கொண்டனர்.

போதைப்பொருள் பயன்பாடு சமூகத்திற்கு ஒரு கடுமையான சவாலாகஇருந்தாலும், கடுமையான சட்ட அமுலாக்க அணுகுமுறை தீர்வு அல்ல. போதைப்பொருள் துஸ்பிரயோகம் மற்றும் அதற்கு வழிவகுக்கும் காரணிகள் முதன்மையானது பொது சுகாதாரம் மற்றும் சமூக பிரச்சினைகளாகும்.

போதைப்பொருள் விற்பனை அல்லதுகடத்தலில்ஈடுபடுகின்றார்கள் என்று சந்தேகிக்கப்படும் நபர்கள் மனிதாபிமானமாக நடத்தப்படுவதற்குத் தகுதியுடையவர்கள், உரிய செயல்முறை மற்றும் வெளிப்படையான, நியாயமான விசாரணைகளின் போது அவர்கள் முறையாக நடத்தப்பட வேண்டும்.

போதைப்பொருளைப்

தொடர்ச்சி 10ம் பக்கம்....



# பணப்பரிசு வெற்றியாளர் என ஏமாற்றி ரூ. 18 லட்சம் மோசடி

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்: இருவர் கைது

தனியார் தொலைத்தொடர்பு நிலையத்தால் நடத்தப்பட்ட பண பரிசு குலுக்கலில், பெருந்தொகை பணம் கிடைத்துள்ளது. அந்த பணத்தை பெற்றுக்கொள்ள 18 லட்ச ரூபா வரி கட்ட வேண்டும். அந்த பணத்தை உடனே வைப்பிலிடுங்கள் என கூறி , 18 லட்சம் ரூபாவை மோசடி செய்த குற்றத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபர் ஒருவருக்கு, தொலைபேசியில் தொடர்பு கொண்ட நபர் ஒருவர் , தன்னை தனியார் தொலைத்தொடர்பு நிலையமொன்றின் பிரதிநிதி எனக் கூறி , தங்கள் நிறுவனத்தால் நடத்தப்பட்ட பரிசு குலுக்கலில் , உங்களுக்கு பெருந்தொகை பணம் விழுந்துள்ளது.

அந்த பணத்தினை பெற வரியாக 18 லட்சம் ரூபாவை செலுத்த வேண்டும். 18 லட்சம் ரூபாவை செலுத்தினால், பரிசு பணத்தை பெற முடியும் எனக் கூறி, கணக்கிலக்கம் ஒன்றினையும் வழங்கியுள்ளார்.

அதனை நம்பிய நபர் குறித்த கணக்கு இலக்கத்திற்கு 18 லட்சம் ரூபா பணத்தை வைப்பிலிட்டுள்ளார். அதன் பின்னர் தன்னுடன் தொடர்பு கொண்ட இலக்கத்திற்கு தொடர்பை ஏற்படுத்த முயன்ற போது , அந்த இலக்கம் செயலிழந்து காணப்பட்டது.

அதனை அடுத்து, குறித்த தனியார் தொலைத்தொடர்பு நிலையத்திற்கு சென்று , விசாரித்த போதே, தான் ஏமாற்றப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் , தென்னிலங்கையை சேர்ந்த நபர் ஒருவரை கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் மற்றும் தொடர் விசாரணைகளின் அடிப்படையில், கைது செய்யப்பட்ட நபரின் உறவினரான மற்றுமொரு நபரை, மோசடிக்கு துணை போன குற்றச்சாட்டில் கைது செய்துள்ளனர். (05)

# 2024 நன்னீர் மீன்பிடியை மேம்படுத்தும் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல்

2024 ஆம் ஆண்டில் நன்னீர் மீன் பிடியைக் கட்டியெழுப்புவதற்காக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனையின் பிரகாரம் கடற்றொழில் அமைச்சு மற்றும் நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையால் (நக்டா) தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பாக கடற்றொழில் அமைச்சு மற்றும் நக்டா அதிகாரிகளுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடினார்.

கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் குறிப்பாக, இலங்கையிலுள்ள பிரதான மீன் கருத்தரிப்பு மத்திய நிலையங்களான உடவளவ்வ, தம்புளை, செவனபிட்டிய, நம்படகல்ல, இங்கினியாகலை உள்ளிட்ட கருத்தரிப்பு மத்திய நிலையங்களின் அபிவிருத்திக்காக 100 மில்லியனுக்கும் அதிகமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதனைப் பயன்படுத்தி அவற்றில் நன்னீர் கருத்தரிப்பு மத்திய நிலையங்களை தொடங்குமாறும் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்களை விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

வட மாகாணத்திற்காக கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 500 மில்லியன் ரூபாவுக்கான திட்டங்களை விரைவில் தயாரித்து தமக்கு அனுப்புமாறும் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர் -

நன்னீர் மீன் வளர்ப்பை வெற்றிகரமாக முன்னெடுத்து அதனூடாக கிடைக்கும் வருமானத்தை தேசிய பொருளாதாரத்தில் இணைத்துக் கொள்வதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும் எனவும், ஜனாதிபதியின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும் அதற்கான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படுமென மேலும் தெரிவித்தார்.

கடந்த வருடம் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பாக மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்குரிய அறிக்கைகளைத் தமக்கு வழங்குமாறு தெரிவித்த அமைச்சர், தான் விரைவில் பிரதான கருத்தரிப்பு மத்திய நிலையங்களுக்கு விஜயம் செய்யவிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது அங்கு நிலவும் குறைபாடுகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்.

இக்கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி குமாரி சோமரத்ன, நக்டா நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் பீ. விஜேரத்ன, பணிப்பாளர் நாயகம் திருமதி அசோக்க, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த, மேலதிக செயலாளர் தம்மிகரணதுங்க உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (05)

# வங்கதேச தேர்தலில்.....







(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

227 ஓட்டங்கள் குவித்து சாதனை படைத்தார். அவர் லோக் பாரதி கட்சியின் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் 2009 விதானசபா தேர்தலில் விக்ரோலி (மும்பை) தொகுதியில் தோற்கடிக்கப்பட்டார்.

கிரிக்கெட் வீரர் மனோஜ் திவாரி, மேற்கு வங்க சட்டசபை தேர்தலுக்கு முன் திரிணாமுல் காங்கிரசில் சேர்ந்தார். ஹூக்ளி மாவட்டத்தில் முதல்வர் மம்தா பானர்ஜிக்கான கூட்டத்தில், திவாரி முறையாக டிஎம்சியில் இணைந்தார். சுனில் கவாஸ்கருடன் இந்திய அணிக்கு ஓப்பனிங் இறங்கிய சேத்தன் சௌஹான், உத்தரபிரதேசத்தின் அம்ரோஹா மாவட்டத்தில் இருந்து இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றியுள்ளார். 1981இல், அவரது கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வந்ததால், அவர் அரசியலுக்கு வந்து பாரதிய ஜனதா கட்சியில் சேர்ந்தார். உத்தரபிரதேசத்தில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராக பதவி வகித்தார்.

### 2023 உலக கோப்பை போட்டியில் கட்சித் தலையீடு

நடந்து முடிந்த 2023 உலக கிரிக்கெட் போட்டியை மிக முக்கியமான அரசியல் ஆயுதமாகவே பா.ஜ.க. அரசு பார்த்தது. ஐந்து மாநிலத் தேர்தல் நடந்து கொண்டிருந்தபோது நடந்த இந்த உலகக் கோப்பை இறுதிப்போட்டி இந்தி பேசும் மாநிலங்களில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி, தேர்தலில் வாக்குகளாக மாறி அது பா.ஜ.க.வின் வெற்றிக்கு உதவும் என அவர்கள் கணக்குப் போட்டார்கள்.

உலக கிரிக்கெட் போட்டியைக் காண ஒட்டுமொத்த மத்திய அமைச்சரவையே மைதானத்தில் வந்து அமர்ந்திருந்தது. பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அகமதாபாத்தில் குவிந்தார்கள். உண்மையில் பா.ஜ.க.வின் கட்சி மாநாடு போலவே கிரிக்கெட் மைதானம் மாறியிருந்தது.

இந்த உலகக் கோப்பைப் போட்டியின் தொடக்கத்தில் இருந்தே இந்தியாவின் அனைத்து மைதானங்களிலும் ‘ஜெய் ஸ்ரீராம்’ என்கிற கோஷம் ஓங்கி ஒலித்தது. இந்தப் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றவுடன் இந்திய வீரர்களுக்கு வரவேற்பு என்ற பேரில் இந்தியா முழுவதும் வெற்றிக் கோப்பையுடன் அவர்களை ஊர்வலமாக அழைத்துச் செல்ல ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஆடம்பர வெற்றி ஊர்வலத் திட்டங்களை பா.ஜ.க. திட்டமிட்டிருந்தது. ஆயினும் இந்திய அணியின் தோல்வி அனைத்து திட்டங்களையும் தவிடுபொடியாக்கியது.

அத்துடன் வெற்றிக் கோப்பையை பிரதமர் நரேந்திர மோடி விஸ்வரூபம் எடுத்த அயோத்தி ராமன் கைகளில் தரையில் மண்டியிட்டு சமர்ப்பணம் செய்வது போன்ற படங்கள் வெளியிடப்பட்டதும் அறிந்ததே.

### பாகிஸ்தான் அரசியலில் இம்ரான் கான்

ஒரு வெற்றிகரமான கிரிக்கெட் வீரராக வலம் வந்து பல நாட்டு வீரர்களை தனது ஆட்டத்தால் கதிகலங்க வைத்த பாகிஸ்தானின் இம்ரான் கான் , இன்று தனது சொந்த நாட்டில் அரசியல் விளையாட்டில் சறுக்கி உள்ளார்.

கபில்தேவ், கவாஸ்கர், சச்சின், பிரைன் லாரா, விவியன் ரிச்சர்ட்ஸ் போல் அந்த காலத்திலேயே கிரிக்கெட்டில் ஒரு கலக்கு கலக்கியவர் இம்ரான். சுமார் இருபது ஆண்டுகாலம் அதாவது 1971 முதல் 1992 வரை பாகிஸ்தான் அணிக்காக ஆடிய இம்ரான் கான் அந்தக் கால கட்டத்தில் ஒரு தலைசிறந்த வீரராவார்.

1992ஆம் ஆண்டு கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற போதும், பாகிஸ்தானின் தனிப்பெரும் நட்சத்திரமாக உயர்ந்த இம்ரான் கான், 1996ஆம் ஆண்டு பாகிஸ்தான் தெஹ்ரீக் இன்சாஃப் என்ற கட்சியை தொடங்கினார்.

பாகிஸ்தான் அரசியல் களத்தில் இம்ரான் கான் சாதிப்பார் என்ற எதிர்பார்ப்பு எழுந்தபோது முதல் தேர்தலில் அவரும், அவரது கட்சியும் படுதோல்வியை சந்திக்க நேரிட்டது. 2002ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுதேர்தலில் தான் இம்ரான் கான் எம்பியாக தேர்வானார்.

அதன் பின்னர் அவர் பிரதமராகி இன்று தனது சொந்த நாட்டு அரசியல் விளையாட்டில் சறுக்கி உள்ளார். தற்போது சிறையிலும் அடைக்கப்படுள்ளார்.

### இலங்கை கிரிக்கெட்டில் புதிய சட்டம்

கிரிக்கெட் தொடர்பில் அறிமுகப்படுத்தப்படவுள்ள புதிய சட்டத்தின் மூலம் இடைக்கால குழுக்கள் மற்றும் அமைச்சரின் அதிகாரங்கள் நீக்கப்படும் என இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்க அண் மையில் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் படு தோல்வி அடைந்து வரும் இலங்கையின் கிரிக்கெட் அணியின் விளையாட்டை அரசியலுக்கு அப்பாற்பட்டு பேணுவதே தமது நோக்கம் எனவும் அதிபர் கூறுயுள்ளார்.

2030ஆம் ஆண்டு இலங்கையின் கிரிக்கெட் இருப்பிடம் தொடர்பில் தமக்கு தொலைநோக்குப் பார்வை உள்ளதெனவும், இதனாலேயே பட்ஜட்டில் 1.5 பில்லியன் ரூபாய் பாடசாலை கிரிக்கெட்டின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணிக்காக எதிர்காலத்தில் அதனை வருடாந்தம் 2 பில்லியன் ரூபாய் வரை அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் நிதி நிர்வாகத்தையும், பாடசாலை கிரிக்கெட்டின் அபிவிருத்தியையும் சுயாதீன நிதியம் ஒன்றிடம் ஒப்படைக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம், சகல செயற்பாடுகளையும் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுத்து, எதிர்பார்த்த இலக்குகளை அடைவதே தமது எதிர்பார்ப்பாகும் எனவும் அதிபர் ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# 18,333 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 2,500 ரூபா கொடுப்பனவுத் திட்டம்

## கீதா குமாரசிங்க தகவல்

பிரதேச செயலக பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 18,333 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 2,500 ரூபா கொடுப்பனவு வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த திட்டமானது இந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில் -

இந்த பணி தொடர்பில் சிறந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்களே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் புதிதாக இணைந்துள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் இப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

நாட்டில் கிட்டத்தட்ட 19,216 முன்பள்ளிகள் உள்ளன. அவற்றில் 37,000 முன்பள்ளி ஆசிரியர்கள் காணப்படுவதோடு பட்டதாரி ஆசிரியர்கள் 29,000 பேர் உள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# டெங்குத் தொற்றுக்கு உள்ளாகும் சிறுவர்கள் எண்ணிக்கை உயர்வு

கடந்த சில நாள்களாகக் காய்ச்சலுடன் வைத்தியசாலைக்கு வரும் சிறுவர்கள் டெங்கு தொற்றுக்குள்ளாகியுள்ளதாக லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

தற்போதுசிறுவர்களிடையேடெங்குகடுமையாகப் பரவி வருவதால் டெங்குத் தொற்றுக்குள் ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் வைத்தியர் தீபால் பெரேரா மேலும் தெரிவித் துள்ளார். (05)

## மீன் பிடிக்கச் சென்றவர் படகு கவிழ்ந்து இறப்பு

பொலன்னறுவை மெதிரிகிரிய பிரதேசத்தில் நீரில் மூழ்கிய ஒருவர் வெள்ளிக்கிழமை சடலம
ாக மீட்கப்பட்டுள்ளார் என மெதிரிகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் விஹாரகம பிர தேசத்தை சேர்ந்த 41 வயதுடையவராவார்.

இவர் வெள்ளிக்கிழமை காலை மெதிரிகிரிய கவுடுலு குளத்தில் மீன் பிடிக்க சென்ற போது படகு கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் மெதிரிகிரிய வைத்தி யசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மெதிரிகிரிய பொலிஸார் மேற் கொண்டுவருகின்றனர். (05)

## வங்கியில் மோசடி செய்த நபர் கைது

பதுளை - தியத்தலாவை பிரதேசத்தில் உள்ள அரச வங்கி ஒன்றின் ஏ.ரி.எம் இயந்திரத்திலிருந்து 2 லட்சம் ரூபாவை மோசடியாகப் பெற்ற நபர் தியதலாவை பொலிஸாரால்கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் மதவாச்சி பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

பதுளை ஹல்தும்முல்ல பிரதேசத்தை நோக்கி பயணித்த பஸ் ஒன்றிலிருந்து சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தியத்தலாவை பொலி- ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



## யாழ்ப்பாணம் வடமராட்சியில் கரை ஒதுங்கிய மர்மப்பொருள்

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு உடுத்துறைபகுதியில்சனிக்கிழமையும் ஒருமர்மபொருள்கரைஒதுங்கியுள்ளது.

அண்மைக்காலமாக வடமராட்சி கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் பல பொருள்கள் கரை ஒதுங்கிவருகின்றன.

குறிப்பாக, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வீசுகின்ற காற்று காலப்பகுதி யில் அதிகளவான பொருள்கள் கரை ஒதுங்குவது வளமையாக இருக்கின்ற போதும் இம்முறை அதிகளவான பொருள்கள் கரையொதுங்கியுள்ளன.

புத்த பெருமான் அமர்ந்திருக்கக் கூடியதேர் மிதப்புகள், உட்படபல்வேறு பொருள்கள் அண்மைக் காலமாக கரையொதுங்கியுள்ளன. (05)

### போதைப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்துபவர்களுக்கு தகுந்த ஆதரவையும், போதைப்பொருளின் மூலகாரணங்களைக்கண்டறிந்து, சமூகத்தில் அவர்கள் மீண்டும் ஒருங்கிணைக்க உதவும் திட்டங்களையும்வழங்கவேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் அலுவலகம் கடந்த ஆண்டு வெளியிட்ட வெளியிட்ட அறிக்கையில், போதைப்பொருள் பாவனையை குற்றமற்றதாக்குதல் மற்றும்தனிப்பட்ட பயன்பாட்டிற்காக போதைப்பொருட்களை வைத்திருப்பது உட்பட பயனுள்ள மருந்துக் கொள்கைகளை உருவாக்குவதற்கு அழைப்பு விடுத்திருந்தது - என்றுள்ளது.

### 220 இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளது.

குறித்த தொழிலாளர்களுக்கு தாயகம் திரும்புவதற்கான விமான பயணச்சீட்டினை வழங்க அந்நாட்டு அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றுள்ளது.

### அனைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின்பொதுச்செயலாளர்பாலித்த ரங்கே பண்டார தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தல் அடுத்த ஒக்டோபர் மாதத்துக்குள் நடை பெறுவது உறுதியான விடயமா கும். அந்த தேர்தலில் ரணில் விக்கிர மசிங்கவே பேர்டட்டியிடசுள்ளார்.

அவர் வெறுமனே கட்சி சார்ந்து இந்தத் தேர்தலில் களமிறங் கப்போவதில்லை. அனைத்து தரப்பினரும் அவரைத் தேர்ந்தெ டுப்பதே நாட்டுக்கும், எதிர்காலத்திற் கும் சிறந்ததாகும். இந்த நாட்டில் பொருளாதாரவிடயங்களைகையாள வல்லஒரேயொருநபர்தான்உள்ளார். அவர் தான் ரணில் விக்கிரம சிங்க. ஆகவே அவரே தலைமைத் துவத்துக்கு ஏற்றவர். இதில் மாற்றுக் கருத்து இல்லை - என்றார்.




JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
DOWNLOAD PASSENGER APP
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 0706563213
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

# இணையவழியில் கடன் வழங்கி அச்சுறுத்தும் கும்பல் குறித்து அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை

வெளிநாடுகளை சேர்ந்த மோசடியான வர்த்தகர்கள் இலங்கையில் ஒன்லைன் ஊடாக கடன் வழங்கும் திட்டங்களை முன்னெடுக்கின்றனர். கடனை உரிய காலத்தில் செலுத்த முடியாமல் போனால் அவர்களை அச்சுறுத்திவரும் இந்த கும்பல் தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் -

எமது நாடு வங்குரோத்தடைந்துள்ள நேரத்தில் வெளிநாடுகளைச் சேர்ந்த மோசடியான வர்த்தகர்கள் இலங்கையில் ஒன்லைன் ஊடான கடன் வழங்கும் திட்டங்களை முன்னெடுக்கின்றனர். அவர்களின் பணத்தை பயன்படுத்தியே இந்த கடன் வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

இதனால் சட்ட ரீதியான பிரச்சினைகள் உள்ளன. இவர்கள் கடனை வழங்கி பெறும ளவில்வட்டியைஅறவிடுகின்றனர்.பிணையாள் கையெழுத்து, சொத்துபிணை எதுவுமின்றியே அவர்கள் கடனை வழங்குகின்றனர். கடன் பெறுபவர்களின் புகைப்படங்கள், குடும்பத்தினரின் புகைப்படங்கள் ஆகியவற்றை பெற்றுக்கொள்கின்றனர்.

பின்னர் ஏதேனும் காரணத்தால் கடனை மீளச் செலுத்தாவிட்டால் பேஸ்புக் ஊடாக கடன் பெற்றவர்களை அச்சுறுத்துவதுடன், அவர்கள் தொடர்பில் சேறுபூசும் செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். அதேவேளை கடன் பெற்றவர்கள் கள்ளத் தொடர்புகளை வைத்திருப்பதாக கூறி குடும்பத்தினரை பிரிக்கவும் நடவடிக்கை எடுகின்றனர்.

மாடிவீடுகளில் இருந்துகொண்டு அவர்கள் இவ்வாறானசெயற்பாடுகளில்ஈடுபடுகின்றனர். இந்த விடயம் தொடர்பில் மத்திய வங்கி ஆளுநரிடம் கேட்டேன்.

அதன்போது சட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன எனவும் அவற்றை நிவர்த்தி செய்ய அடுத்து வரும்நாடாளுமன்ற அமர்வில் நிதி விடயம் தொடர்பான சட்டமூலமொன்று வரும் என்றும் அதன்போது இதனை செய்ய முடியாமல் போகும் என்றும் தெரிவித்தார்.

வங்குரோத்தடைந்த நாட்டில் மக்களிடம் பணமில்லை. அவர்களிடம் பணம் இருக்கின்றது. இதன்படி வட்டியின்றி கடன் வழங்குவதாக கூறிக்கொண்டு அதனை செய்யாது 300 வீத வட்டியை அறவிடுகின்றனர். அதனை மீளச் செலுத்த தாமதமானால்அச்சுறுத்தும்நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். இவர்கள்வீசாவிலேயே வருகின்றனர். இவர்கள் வணிக வீசாவில் வந்துள்ளனரா? என்று ஆராய்ந்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் இந்த விடயத்தில் அரசாங்கத்தில் யாருக்கும் எதிராக விரல் நீட்ட முற்படவில்லை. அதனால் இது தொடர்பில் உடனடியாக தலையிட்டு இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றேன். அதேநேரம் இவ்வாறான மோசடியாளர்களிடம் கடன் பெற்றிருந்தால் அவற்றை மீள வழங்க வேண்டாம் என்றும் கோருகின்றேன். - என்றார்.

(05)

# ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணங்களால் நாட்டுப் பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளது

## செஹான் சேமசிங்க கூறுகிறார்



உலக நாட்டு தலைவர்களை ஜனாதிபதி நேரில் சந்தித்ததால் தான் நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளது. உல்லாசப் பயணங்களுக்காக ஜனாதிபதி வெளிநாடு செல்லவில்லை. ஆகவே பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தவிர்த்துக் கொள்ள வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் ஜனாதிபதியின் வெளிநாட்டு பயணங்களுக்கு மேலதிகமாக 2000 லட்சம் ரூபா ஒதுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். இதற்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது -

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை . மேலதிக மானியம் மற்றும் குறைநிரப்பு பிரேரணை குறித்து அநுரகுமார திஸாநாயக்கவுக்கு தெளிவில்லாமல் இருக்கின்றமை கவலைக்குரியது.

ரெலிகொம் நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கு 1300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். ரெலிகொம் நிறுவனத்துக்கு சொந்தமான 0.73 வீத பங்குகள் தேசிய சேமிப்பு வங்கி வசமுள்ளன. இந்த பங்குகளை திறைசேரிக்கு சொந்தமாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டுமக்களையும், நாடாளுமன்றத்தையும் தவறாக வழிநடத்தும் வகையில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதி உலகைவலம்வருவதற்கு 2000 லட்சம் ரூபா மேலதிக மானியம் குறைநிரப்பு பிரேரணை ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகிறார். ஜனாதிபதி உலக நாட்டு தலைவர்களை நேரடியாக சந்தித்து பேச்சில் ஈடுபட்டதால் தான் நாட்டின் கடன் நிலை ஸ்திரமடைந்துள்ளது. பொருளாதார மீட்சிக்காக முன்னெடுக்கப்பட்ட தீர்மானங்களில் ஜனாதிபதியின் பங்களிப்பு இன்றியமையாதது.

வெளிநாட்டு சுற்று பயணங்களுக்காக 2000 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை அடிப்படையற்றது. 2024 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட மானியங்களுக்கு அமைவாகவே ஜனாதிபதியின் செலவினங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆகவே பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். -என்றார். (05)

# நீரில் அடித்துச் செல்லப்பட்ட இளைஞன் சடலமாக மீட்பு

## வாழைச்சேனையில் சம்பவம்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாசிவன்தீவு பகுதியில் வெள்ளிக்கிழமை நீரில் அடித்துச் செல்லப்பட்ட இளைஞன் சனிக்கிழமை காலை 7.30 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நண்பர்களுடன் நீராடச் சென்ற வாழைச்சேனை கோழிக்கடை வீதியைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞனே இவ்வாறு நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயிருந்தார்.

வெள்ளிக்கிழமை கல்குடா சுழியோடிகள் தேடுதல் மேற்கொண்ட போதும் இளைஞன் மீட்கப்படாத நிலையில் சடலமாக சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளார் .

இந்த விடயம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு, மரண விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பி டத்தக்கது. (05)

# போரில் காலை இழந்த பெண் மீது தாக்குதல்

முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வீடொன்றுக்குள் புகுந்து குடும்பப் பெண் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த பெண் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் .

கணவன் வேலைக்குச் சென்ற நிலையில் தனித்திருந்த குறித்த பெண் மீதே இனந்தெரியாத நபர்கள் இரும்புக் கம்பியால் தாக்கிக் கொலை செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பெண் இறுதிப் போரில் காலொன்றை இழந்தவர் என்பதுடன் சம்பவம் தொடர்பில் முள்ளியவளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(05)

# செங்கடலிற்கு கப்பலை அனுப்பும் இலங்கை மேற்காசிய நாடுகளின் தூதர்கள் அதிருப்தி

செங்கடலிற்கு கப்பலை அனுப்பும் இலங்கையின் தீர்மானம் தொடர்பில் மேற்காசிய நாடுகளின் தூதுவர்கள் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற்ற பணிகளில் இலங்கையர்களை இஸ்ரேல் வேலைக்கு அமர்த்துவதற்கு அனுமதிக்கவேண்டாம் எனவும் மேற்காசியநாடுகளின்தூதுவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சமீபத்தில் சந்தித்தவேளை மேற்காசிய நாடுகளின் தூதுவர்கள் செங்கடலிற்கு கப்பலை அனுப்பும் தீர்மானம் குறித்து வெளிப்படையாக அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

இஸ்ரேலுடனானபாதுகாப்பு உடன்படிக்கைகளின் அடிப்படையிலேயே அமெரிக்காவும் பிரிட்டனும் செங்கடலில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன ஏனைய நாடுகள் அவ்வாறு செயற்படவில்லை என மேற்காசிய நாடுகளின் தூதுவர்கள் தெரிவித்துள்ளனர்.

(05)

# உழவு இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இரு பிள்ளைகளின் தந்தை சாவு



யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கோரியடி பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை (12) இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பணியாற்றும்வெற்றிலைக்கேணிமுள்ளியானை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 31 வயதுடையவரே உயிரிழந்துள்ளார்.

பணி முடித்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பும் போது மருதங்கேணி நோக்கி சென்ற இராணுவ உழவு இயந்திரத்துடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(05)

### 'ஹரக் கட்டா' உடன் தொடர்பில் இருந்த ஆறு பேர் கைதாகினர்

பிரபல பாதாள உலக நபரான நதுன் சிந்தக விக்ரமரத்ன என்றழைக்கப்படும் 'ஹரக் கட்டா' உடன் தொடர்பில் இருந்த ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வெலிகம மற்றும் அதுருகிரிய பிரதேசத்தில் வைத்து கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

(05)

# உணவுக் கண்காட்சிக்காக உரிய அனுமதியின்றி இறக்குமதிசெய்த மாடு, பன்றி இறைச்சி வகைகள்

கொழும்பில் உள்ள 5 நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இடம்பெறவிருந்த 10 நாள் உணவுக் கண்காட்சியில் வைப்பதற்காக உரிய அனுமதியின்றி இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 300 கிலோ மாட்டிறைச்சி மற்றும் பன்றி இறைச்சிக்கு சுகாதார திணைக்களம் கைப்பற்றியுள்ளது.

இலங்கை சுகாதாரத் துறையின் முறையான அனுமதி இல்லாமை, இறைச்சியை வழங்கிய இங்கிலாந்து நிறுவனத்தின் உறுதிப்படுத்தும் சான்றிதழ் இல்லாமை போன்ற காரணங்களால் குறித்த இறைச்சி வகைகளை கண்காட்சிக்கு வைப்பதற்குசுகாதாரதிணைக்களம்மறுத்துள்ளது.

இந்த இறைச்சி வகைகள் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் பரிசோதனை முடியும் வரை இறைச்சியை பயன்படுத்த வேண்டாம் எனவும் சுகாதார திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கை அடுத்த சில நாள்களில் வழங்கப்படும் என மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் வைத்தியர் விஜித குணசேகர தெரிவித்துள்ளார்.

முன்னதாக பல நாடுகளில் பன்றிக்காய்ச்சல் பரவிவருவதால்சீனாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட பன்றி இறைச்சி உள்ளிட்ட இறைச்சி வகைகளை அழிக்க சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# கொள்ளுப்பிட்டி 3 மாடி கட்டடத்தில் தீ: தெய்வாதீனமாக உயிர் தப்பிய இருவர்

## சொத்துக்கள் எரிந்து நாசம்



கொழும்பு, கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள மூன்று மாடிக் கட்டடம் ஒன்றின் மேல் மாடியில் வெள்ளிக்கிழமை நள்ளிரவு தீ பரவியுள்ளதாகக் கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கட்டடத்தின் மேல் மாடியில் இருந்த இருவர் எவ்வித காயங்களுமின்றி தப்பியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

28 தீயணைப்புப் படையினர் 7 தீயணைப்பு வண்டிகளுடன் தீ பரவலைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

இந்தத் தீ பரவலில் ஏராளமான சொத்துக்கள் நாசமடைந்துள்ளன.

மின்கசிவு காரணமாக இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் . (05)

# தாயுடன் தொடர்பைப் பேணி பிள்ளைகளை துஸ்பிரயோகம்

## சந்தேகநபர் கைது

தாயுடன் தொடர்பை பேணிய நபரால் இரு மகள்மார் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்ட சம்பவம் களுத்துறையில் இடம்பெற்றுள்ளது.

9 மற்றும் 13 வயதுடைய பெண் பிள்ளைகளை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய நபர் பயாகலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கலேவெல பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடையவராவார்.

பாதிக்கப்பட்ட சிறுமிகளின் தந்தை 4 வருடங்களுக்கு முன்னர் மனைவி மற்றும் பிள்ளைகளை விட்டு பிரிந்து சென்றுள்ளார்.

இந்நிலையில், இரு சிறுமிகளின் தாய் வேறொரு நபருடன் தொடர்பை பேணி வந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட சிறுமிகள் சுகவீனம் காரணமாக களுத்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது இரு சிறுமிகளும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

தாயுடன் தொடர்பைப் பேணிய நபரே இரு சிறுமிகளையும் அவர்களின் வீட்டில் வைத்து பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினர் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்ததையடுத்து சந்தேக நபர் பயாகலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பயாகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)




THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

14th EDITION

# Jaffna International Trade Fair

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

JITF 2024

JANUARY ஜனவரி

**19 20 21**

10.00மு.ப - 8.00பி.ப

**Muttraweli Grounds**
(Next to Jaffna Fort)

**முற்றவெளி மைதானம்**
(யாழ் கோட்டைக்கு அருகில்)




Automobile | Construction | Consumer Goods | Apparel
Hospitality | Agriculture | Travel & Tourism | IT | Education
Beverage, Packaging Industry and many more...

PLATINUM SPONSOR: DIMO THE PERFECT PARTNER

GOLD SPONSORS: ADRIAN SOLAR GREEN | NIPPON CEMENT

MEDIA SPONSORS: PRINT | RADIO | TELEVISION Capital | DIGITAL

ORGANIZED BY: LECS LANKA EXHIBITION

IN ASSOCIATION WITH: CCIY

SILVER SPONSORS: Anchor | SOORYA | Hayleys Solar | 4ever | Darley Butler | Elephant House | KELLS KREST | PHOENIX | RHINO | Sera

IMALKA : +94 77 1093792 | imalka@saexhibitions.com www.jitf.lk jitf.lk

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.01.2024இல் வெளியிடப்பெற்றது.